<u>குழித்துறை நகர்மன்றத்தின் 31-07-2023 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>

<u>நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை நகராட்சியில் வாவுபலி நிகழ்ச்சி நடைபெறும் மைதானம் தற்போது நகராட்சி நிர்வாகம், பொதுப்பணித்துறை மற்றும் கால்நடை துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்படி இடத்தை பொதுப்பணித்துறை மற்றும் கால்நடை துறைகளின் கட்டுபாட்டில் இருந்து விடுவித்து நகராட்சி வசம் ஒப்படைக்க தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.560 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை நகரம் கிராம புல எண்.A5/1, A6/143-அரசு சாலை புறம்போக்கு நிலத்தில் விளவங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் மின்கம்பங்களில் சாய்ந்தவாறு மிகவும் ஆபத்தான நிலையில் நிற்கும் 4 இலவு மரங்களை (விலைமதிப்பற்றவை) நகராட்சியால் உடனடியாக அப்புறப்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.560 (2) தீர்மானிக்கப்பட்டது.

<u>நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் வாவுபலி பொருட்காட்சியை முன்னிட்டு குழித்துறை பாலம் முதல் திருத்துவபுரம் வரை சாலையின் இருபுறமும் உள்ள புல்செடிகள் மற்றும் மண்மேடுகளையும், பாலத்தின் வலதுபுறத்தில் உள்ள குப்பை மேடுகளையும் ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.561 தீர்மானிக்கப்பட்டது.

<u>3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.லு. ஷாலின் சுஜாதா கொண்டு வரும் தீர்மானம்</u>

1) கல்பாலத்தடியிலிருந்து வண்ணாரத்துவிளை வரை உள்ள காங்கீரிட் சாலையில் இரண்டு பக்கமும் சுவர் எழுப்ப இம்மன்றம் தீர்மானித்தல்.

மன்றத்தீர்மான எண்.562 தீர்மானிக்கப்பட்டது.

<u>16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) காவலர் குடியிருப்பு பின்புறம் உள்ள வடிகால் கழிவுநீர் தேங்கி உள்ளதால் அதை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.563 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) உரக்கிடங்கில் போதிய இடவசதியை ஏற்படுத்தும் நோக்கில் அங்கு இருக்கும் பாறைகளை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட துறை அனுமதி கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.563 (2) தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN75M 8752-க்கு புதிய டயர்கள் மாற்றி Allignment செய்த வகையில் Sherjin Traders என்ற நிறுவனத்திற்கு ரூ.1640/-ஐ ஓட்டுநர் திரு. நடராஜன் என்பவர் சொந்த தொகையில் செலவு செய்யப்பட்டது. எனவே ஓட்டுநருக்கு செலவு செய்யப்பட்ட தொகையான ரூ.1640/-ஐ கேட்டுள்ளார். தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2386/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.564 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான தூய்மை பணியாளர்களை கொண்டும், தளவாடாசாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்திட மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட மாநில அளவில் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் Enthrall என்ற நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் ரூ.52343/- வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.:- மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.
ந.க.எண்.134/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.565 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சியில் 98-வது வாவுபலி பொருட்காட்சியினை முன்னிட்டு அவசர அவசியமாக பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் நகர்மன்றத் தீர்மானம் எண்.548, நாள் 30-06-2023-ன்படி உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதால் 11-07-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.வி. பாலகிருஷ்ணன் | 0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எ. ஆன்றணி | 0.35% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்புக்நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.வி. பாலகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:.- நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1659/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.566 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் விழிப்புணர்வு செய்வதற்கு Flex அடித்த வகைக்கு ரூ.2700/- மற்றும் Spiral Binding, Colox Xerox எடுத்ததற்கு ரூ.320/- மொத்தம் ரூ.3020/- S.B.M. Animater திரு. விக்னேஷ் என்பவருக்கும் M.C.C. பேலிங் செய்வதற்கு ரோப் வாங்கிய செலவு ரூ.12,157/- துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கும் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:.- அத்தியாவசிய பணிகளுக்கு செலவு மேற்கொண்டுள்ளதால் நகராட்சி பணியாளர்களுக்கு செலவின தொகை வழங்கலாம்.
ந.க.எண்.3256/2022/H1.

மன்றத்தீர்மான எண்.567 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19-07-2023-ல் கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

I. பலன்தரும் மரங்கள்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.கே. செல்வகுமார்,<br>விவேகானந்தா நகர், 12-227,<br>மார்த்தாண்டம். | 5000/- | 12000/- |

II. மார்த்தாண்டம் மீன் சந்தை கட்டண கழிப்பிடம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.சி. செல்வமணி,<br>மேலே குழிவட்டம்,<br>மருதங்கோடு. | 25000/- | 42100/- |
| 2 | திரு.கே. கிறிஸ்துதாஸ்,<br>அமலறவிளை,மீனச்சல் | 25000/- | 30100/- |

III. மார்த்தாண்டம் கருஙகல் சாலை கடை எண். 7

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.கே. ஸ்ரீகண்டன்,<br>கொடுங்குளம், மார்த்தாண்டம் | 50000/- | 7000/- |
| 2 | திரு.கே. ஜீவா,<br>புதுவிட்டுவிளை, சிதறால் | 50000/- | 7500/- |

IV. மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண். 6

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. மினிமோள்,<br>சினிவிளைவீடு, கல்லுப்பாலம் | 50000/- | 4550/- |
| 2 | திருமதி. பீணா,<br>கல்லுப்பாலம், ஆற்றூர் | 50000/- | 4500/- |

V. மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண். 7

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. ராஜம்மாள்,<br>மாம்பள்ளிதோட்டம், விரிகோடு | 50000/- | 4350/- |
| 2 | திரு.அ. ராஜன்,<br>தேமானூர், திருவட்டார் | 50000/- | 4650/- |

VI. கருங்கல் சாலை கடை எண். 5

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. ராஜம்மாள்,<br>மாம்பள்ளிதோட்டம், விரிகோடு | 50000/- | 5800/- |
| 2 | திரு. பத்மகுமார்,<br>தோப்புவிளை, மடிச்சல் | 50000/- | 6200/- |

VII. பி-பி.முனுசாமி வணிகவளாக கடை எண். G7

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. வெனிஷ்,<br>மணலிவிளை, மேல்பாலை | 50000/- | 4000/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் காணும் பலன்தரும் மரங்களுக்கான குத்தகை உரிமம் 2021-2022-ல் ரூ.33075/-க்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 2022-2023-ல் குடிநீர் வளர்ச்சி திட்ட பணியான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மரங்கள் முறித்து அப்புறப்படுத்தப்பட்டு மரங்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்ததால் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை.

வரிசை எண்.II-ல் காணும் மீன்சந்தை கட்டண கழிப்பிடம் தற்போது இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

வரிசை எண்.III-ல் காணும் மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடை எண்.7 2021-2022-ல் இறுதியாக ரூ.11000/-க்கு ஏலம் விடப்பட்டிருந்தது.

வரிசை எண்.IV-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடையானது 2015-2016 முதல் பூட்டிய நிலையில் உள்ளது.

வரிசை எண்.V-ல் காணும் மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண்.7 ரூ.5500/-க்கு ஏலம் செயல்பட்டு வந்தது.

வரிசை எண்.VI-ல் காணும் மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடை எண்.5 2021-2022-ல் மாத வாடகையாக ரூ.20,000/-க்கு ஏலம் விடப்பட்டிருந்தது.

வரிசை எண்.VII-ல் காணும் பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண். G7 ரூ.8000/-க்கு செயல்பட்டு வந்தது.

மேற்படி குத்தகை உரிமங்களுக்கு உரிமம் வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண்.3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண்.568 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

நகர்மன்ற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேயர்கள், துணை மேயர்கள், மன்ற தலைவர்கள், மன்றத் துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட அரசாணை (நிலை) எண்.98, நாள் 13-07-2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.934/2022/இ1

மன்றத்தீர்மான எண்.569 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் கருங்கல் சாலைப் பகுதியில் உள்ள மார்த்தாண்டத்தில் இயங்கி வருகின்றது. இப்பேருந்து நிலையமானது கட்டப்பட்டு 16 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால் அதனை வர்ணம் பூசவும், பழுதடைந்த மேற்கூரைகளில் புதியதாக தள ஒடு பதிக்கவும், பழுதடைந்துள்ள மின்சாதனங்களை மாற்றியமைக்கவும் ரூ.66.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியானது சட்ட மன்ற அறிவிப்பாக இருப்பதினால் அவசியம் கருதி இதனை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதிக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.570 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சியில் 15-வது நிதிக்குழு மானியம் 2022-2023 Tied Grant-ன் கீழ் மார்த்தாண்டம் காய்கறிச்சந்தையில் அமைந்துள்ள OHT Tank சிறியகாட்டுவிளை மற்றும் திருத்துவபுரத்தில் அமைந்துள்ள Tank ஆகியவற்றை சீரமைக்கும் பணிக்கு ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி ந.க.எண்.18277/2022/CFC-1, நாள் 11-05-2023-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.1374/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.571 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.1-ல் கல்லுக்கெட்டியில் சிறுவர் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.13.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை AMRUT 2.0 திட்டத்தின்படி மேற்கொள்ள G.O.(MS).No.7, நாள் 20-01-2023 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.3347/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.572 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் கழிவுகளில் இருந்து பிரித்து எடுக்கப்படும் மறு சுழற்சிக்கு பயன்படாத உலர்ந்த கழிவுகளை மார்த்தாண்டம் மீன் மார்கெட்டின் ஒரு பகுதியில் சேகரிக்கப்பட்டு அங்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அதன் அளவு அதிகமாக தேங்கியுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மேற்படி பணியினை CSR நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2051/2023/H1.

மன்றத்தீர்மான எண்.573 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் கழிவுகளில் இருந்து பிரித்து எடுக்கப்படும் மறு சுழற்சிக்கு பயன்படாத உலர்ந்த கழிவுகளை மார்த்தாண்டம் மீன் மார்கெட்டின் ஒரு பகுதியில் சேகரிக்கப்பட்டு அங்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அதன் அளவு அதிகமாக தேங்கியுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மேற்படி பணியினை மேற்கொள்ளவும் 05-07-2023 நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| வ. எண். | நிறுவனம் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | SUN ENTERPRISES | 2700/- (லாரி நடை ஒன்றுக்கு டீசல் டிரைவர் சம்பளம் உட்பட) |
| 2 | S. PONRAJ ENTERPRISES | 2500/- ” |
| 3 | BENS AGENCIES | 2550/- ” |

மேற்படி வரிசை எண்.2-ல் கண்ட விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி பணியினை S. PONRAJ ENTERPRISES என்னும் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு.-</u> நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2051/2023/H1.

மன்றத்தீர்மான எண்.574 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சிக்கு 6-வது நிதிக்குழு மானியம் SFC 2023-2024-ம் ஆண்டிற்கு எட்டு சாலைகளுக்கு பராமரிப்பு செய்வதற்கென ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.4,6,11,14,16,17,20-களில் மகாதேவர் கோயில் முதல் மேட்டுகிராமம் வரை புதியதாக சாலை அமைக்கும் பணி, வள்ளிக்கோடு முதல் அம்பலத்துவிளை-2 வரை, பெருந்தெரு சந்தை முதல் அம்மன்கோவில் சாலை வரை, கண்ணக்கோடு சாலை, கொல்லகுளம் முதல் வடக்குத்தெரு சாலை வரை, சானல் சிறியக்காட்டுவிளை சாலை-2, சாலை-1, நந்தன்காடு சாலை மேற்படி பணிகள் மேற்கொள்ள ந.க.எண்.2626/2023/பி1, நாள் 03-07-2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1767/2023/இ1.
மன்றத்தீர்மான எண்.575 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.13</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16133/2023/யுபிஏ, நாள் 14-07-2023-ன் படியும் மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படியும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் பயன்பெற தகுதியான நபர்களை தேர்வு செய்ய 05-08-2023 முதல் 16-08-2023 வரை நகராட்சிக்குட்பட்ட 6 இடங்களில் நடைபெற உள்ள முகாம்களில் நிழற்கூடங்கள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், மின்சார வசதிகள், மாற்றுதிறனாளிகள் மற்றும் முதியவர்கள் பயன்படுத்தும் வகையில் சாய்வு தளங்கள் போன்ற தேவையான ஏற்பாடுகளை நகராட்சியின் மூலம் செய்து கொடுக்கவும் மேலும் மேற்படி திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் தேநீருடன் கூடிய சிற்றுண்டி வழங்கவும், மதிய உணவு வழங்கவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி திட்டம் குறித்து பொதுமக்கள் அறியும் விதத்தில் விளம்பரம் செய்வதற்கும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி பணியின் அவசியம் குறித்து பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்தை பொதுநிதியின்கீழ் செலவு செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1722/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.576 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சி நமக்கு நாமே திட்டம் (NNT) 2022-2023-ன்கீழ் கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

1) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அட்டைக்குளத்தில் சூரிய உயர்கோபுர விளக்கு பொருத்தும் பணி - மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்
2) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெரு இசக்கியம்மன் கோயில் அருகில் சூரிய உயர்கோபுர விளக்கு பொருத்தும் பணி - மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்
3) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட குழித்துறை நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் சூரிய உயர்கோபுர விளக்கு பொருத்தும் பணி- மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்
4) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் அட்டக்குளம் சாலையில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி- மதிப்பீடு ரூ.3.75 இலட்சம்
5) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் தபால் நிலையம் சந்திப்பு முதல் சிவன் கோயில் வரை கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி - மதிப்பீடு ரூ.4.00 இலட்சம்

மேற்படி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி ந.க.எண்.567/2023/ஆ1. நாள் 16-03-2023-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.526/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.577 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சி வார்டு எண்.15 அட்டக்குளம் சாலை முதல் சியோன் சர்ச் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் வழிந்து சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. மேற்கண்ட மழைநீர் கால்வாய் பொதுமக்கள் நலன் கருதி சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,60,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2080/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.578 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.7 கழுவன்திட்டை சாலையில் உள்ள நீதிமன்றம் முகப்பு வாயில் முன்பாக அமைந்துள்ள சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்து மற்றும் கழிவுநீர் சாலையில் வழிந்து பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி சிறுபாலத்தை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,40,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2078/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.579 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.13 பந்நியாணி சாலையில் அமைந்துள்ள சிறுபாலம் சேதமடைந்து போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி சேதமடைந்த பாலத்தை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,00,000/- (மூன்று இலட்சம்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2079/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.580 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் அட்டக்குளம் மேற்கு பகுதி வழியாக மார்த்தாண்டம் நகரின் மையப்பகுதியில் உள்ள பெரிய வடிகால் ஒடையில் மழைகாலங்களில் அதிக அளவு மழைநீர் ஒரே நேரத்தில் வரும் பொழுது, அட்டக்குளம் மேற்கு பகுதி வடிகால் ஒடை சிறியதாக உள்ளது. மேலும் வடிகால் ஒடையின் வெளிபக்கம் உயரமாக தடுப்பு சுவர் கட்டினால் கொடுங்குளம் ஊரின் மையப்பகுதி சாலை மற்றும் வீடுகளில் மழைநீர் தேங்குவது தடுக்கப்படும். அதன் அடிப்படையில் அட்டக்குளம் மேற்குபகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து உள்ளது. ஆகவே பழுதடைந்த வடிகால் சீரமைக்கவும், மழைநீர் வடிகாலில் மழைநீர் வெளியேறாமல் தடுக்க வெளிபுறம் உள்ள வடிகால் சுவர் உயர்த்தி அமைக்கவும் உத்தேச மதிப்பீடு

ரூ.5,40,000/- ஆகும் எனவே தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2019/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.581 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.